**இந்திய வானிலைத் துறை &தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை – 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 28 .04. 2021**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மலைத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. நீர்பாசனத்தை தள்ளிப்போடவும் மற்றும் கோடை உழவு செய்யவும்.
- கோடை மழையினை நிலத்தடியில் சேமிக்கவும், பயிர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களை சரிவிற்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும்.
- வானம் மேகமூட்டத்துடன் மற்றும் இடி மின்னலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கு அடியுரம் அளிப்பதை தவிர்க்கவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் அடித்து செல்ல வாய்ப்புள்ளதால் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்க வேண்டாம்.
- இலேசானதூறல் மழையே எதிர்பார்க்கப்படுவதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைத்து தொடர்ந்து நீர் பாசனம் செய்யவும்.
- பெய்யும் மழையினை பயன்படுத்தி இறவை கம்பு மற்றும் பாடுவாசி விதைப்பினை தொடரவும். விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி) விதைக்கவும்.
- தொடர்ந்து மழை பொழிவதால் இறவை கம்பு பயிரில் அதிக களைகள் வர வாய்ப்புள்ளது. எனவே மழை இல்லாத தருணங்களில் களை எடுத்து, பயிர்களை களைத்து பயிர்களுக்கு இடையில் 15 செ.மீ இடைவெளி இருக்குமளவு பயிர்களின் எண்ணிக்கையை பராமரிக்கவும்.

- சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் காய்கறிகளில் சிலந்தி தாக்குதல் வர வாய்ப்புள்ளது. ஆதலால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் ப்ராபார்கைட் 2.5 மில்லி அல்லது ஸ்பைரோமெஸ்பென் 0.5 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரிக்க வேண்டும்.
- தொடர் மழையின் காரணமாக கரும்பு பயிரில் இரும்பு சத்து குறைபாடு தென்படுகிறது. எனவே இதை நிவர்த்தி செய்ய மழை இல்லாத தருணங்களில் 1 சதவீதம் இரும்பு சல்பேட் கரைசலை 1 சதவீதம் யூரியா கரைசலுடன் சேர்த்து 15 நாட்கள் இடைவெளியில் குறைபாடு நிவர்த்தி ஆகும் வரை தெளிக்கவும்.
- கடந்தவார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி பின் பருவ கரும்பு சாகுபடியை தொடர்ந்து மேற்கொள்ளலாம். மேலும் நடவுக்கு முன்பு கருணைகளை 0.1 சதவீதம் கார்பன்டசிம் கரைசலில் 15 நிமிடங்கள் ஊறவைத்து பின்பு நடவு செய்யவும்.
- தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழை நீரை சேகரிக்கலாம்.
- இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- நிலவும் வானிலையில் மஞ்சள் கிழங்கை நடவு செய்வதற்கு உழவு மேற்கொள்ளவும். ஒரு எக்டருக்கு 12.5 டன்கள் தொழு உரத்தை வயலில் இட்டு கடைசி உழவு மேற்கொள்ளவும்.
- இடி மின்னல் எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாடடுக்கொட்டைகளில் மின்சாரத்தை துண்டிப்பதன் மூலம் தீ பிடிக்காமல் பாதுகாக்கலாம். மேலும் மாடு, ஆடு மற்றும் கோழி தீவனங்களை நனையாமல் பாதுகாக்கவும்.
- கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.
- ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேய விடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

## 2.காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலோலசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 8 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- தற்போது நிலவக்கூடிய வானிலையால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள உளுந்து மற்றும் பாசிப்பயறு செடிகளை அறுவடை செய்யவும்.
- வரும் தினங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயறு செடிகளை நன்கு வெயிலில் காயவைத்து பின்பு பயறுகளைப் பிரித்தெடுத்து சுத்தம் செய்து பின்பு ஈரப்பதம் 9 சதவீதத்திற்கும் குறையும் வரை நன்கு உலர்த்தி சேமிக்கவும்.

- தற்போது நிலவக்கூடிய வானிலையால் எள் பயிரில் தென்படும் பாக்டீரியா இலைக்கருகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோசைக்ளின் 500 பிபிம் மருந்தினை 120 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- எதிர்வரும் கோடை இறவை பருவத்தில் சாகுபடி செய்ய ஆடுதுறை 5 ஏற்ற இரகமாகும்.
- தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் இலைக்கருகல் நோய் ஏற்படும் வாய்புள்ளதால் இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு மேங்கோசெப் 2 கிலோ என்ற அளவில் 2 அல்லது 3 முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையால் வெப்ப அலை வீசக்கூடும் என்பதால் கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்ப தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.

### 3. தெற் கு மண் டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும்.. வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது,. அதிகபட்ச வெப்பநிலை 36-38° செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 26-27° செ ஆகவும், காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 15 கி.மீ வரை இருக்கும் என்றும் காற்றின் திசை மேற்கு மற்றும் தெற்கு திசையில் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

- தற்போது நிலவும் வானிலையில் மண் ஈரத்தினைப் பொறுத்து பயிருக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் மானாவாரி சாகுபடி பயிர்களுக்கு மண்ணின் தரத்தை மேம்படுத்த அறுவடை செய்யப்பட்ட பயிர் கழிவுகளை துண்டுகளாக வெட்டி மண்ணில் கலக்கவும்.
- நிலவும் வானிலையால் நெல்லில் இலைசுருட்டுப்புழு தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு அசாடிராக்டின் 0.03% 1000 மி.லி அல்லது குளோரோடேரேனிலிபுருள் 18.5% SC @150கி அல்லது தையோமீத்தாக்சைம் 25% WG @150கி என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தவும்.
- தற்போது நிலவும் வானிலையில் வெள்ளரி பழத்தில் தென்படும் ஈயைக் கட்டுப்படுத்த தாக்குதலுக்குள்ளான பழங்களை சேகரித்து அழித்து விட வேண்டும் மற்றும் பழ ஈ பொறி ஒரு ஏக்கருக்கு நான்கு வைக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் உளுந்து வளர் பருவத்தில் மண்ணில் இருந்து அதிக நீர் ஆவியாகாமல் தடுக்க பயிர் கழிவு மூடாக்கு பயன்படுத்தவும்.
- நிலவும் வானிலையில் கொய்யாச் செடியில் தேயிலை கொசு தென்படுகிறது. பூக்கும் தருணத்தில் மாலதியோன் 2மி.லி/லிட்டர் (அல்லது) 3% வேப்பண்ணெய் 3 வார இடைவெளியில் 4 முறை தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையால் எலுமிச்சையில் சொறி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம் /லிட்டர் தண்ணீரில் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 37°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 50 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் எலுமிச்சை செடியில் காய்பிடித்தல் அதிகமாவதற்கு 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் இசாபியான் மருந்து அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் அமினோஅமிலத்தை கலந்து பூக்கும் தருணத்தில் தெளிக்கவும். காய்கள் உதிராமல் இருக்க என்.ஏ.ஏ (நாப்தலின் அசிடிக் ஆசிட்) வினை 30 பி.பி.எம் என்ற அளவில் கலந்து காய்கள் கோலிக்குண்டு அளவு இருக்கும் போது தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் மல்லிகை செடியில் வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 கிராம் என்ற அளவில் டிரைக்கோடெர்மா விரிடி கலந்த தெளிப்பானின் நாசிலை நீக்கி விட்டு வேர்ப்பகுதியில் நேரடியாக ஊற்ற வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் தென்னையில் காண்டமிருக வண்டு பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த 6 நாப்தலின் உருண்டைகளை மட்டையின் இடுக்குகளில் வைக்க வேண்டும். மேலும் ஒரு தென்னை மரத்திற்கு 75 மில்லி தண்ணீருடன் 25 மில்லி கார்போசல்பான் மருந்தினை கலந்து வேர் வழியாக செலுத்த வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் திரட்சையில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இவ்வகை பூச்சியின் தாக்குதலால் பழங்கள் முதிர்வதற்கு முன்பே உதிர்ந்து விடும். இலைகள், காம்புகள், தண்டுகளை சேகரித்து அழிக்க வேண்டும். பழங்கள் தாங்கியுள்ள கிளைகளில் ஒட்டுப்பசை அட்டையை கட்டி வைக்கவும். மேலும் இரைவிழுங்கியான கிரிப்டோலேமெஸ் மான்ட்ரோஜெர்ரி வண்டுகளை ஒரு கொடிக்கு 10 என்ற எண்ணிக்கையில் விட்டும் கட்டுப்படுத்தலாம்.
- தற்போது நிலவும் வானிலையால் கால்நடைகளை பாதுகாக்க 3 பெரிய நெல்லிக்காயை இடித்த தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம். மேலும் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 1 கைப்பிடி அளவு வெந்தயம், 1 கைப்பிடி அளவு நெல்லிக்காய் வற்றல் போன்றவைகளை நன்கு ஊரவைத்து அரைத்து தீவனத்துடன் கலந்து கொடுக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 11°செ ஆகவும், காலை நேர மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 55 சதவிகிதமாகவும், பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- வரும் நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தவிர்த்தல் வேண்டும்.
- மழையின் காரணமாக காய்கறி பயிர்களில் வாடல்நோயைக் கட்டுபடுத்த

- தற்போது நிலவும் வானிலையால் உருளை கிழங்கு பயிரில் 30ஆம் நாட்களில் ஒரு ஏக்கருக்கு, 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஸ் உரம் இடவேண்டும்..
- தற்போது நிலவும் வானிலையால் தேயிலை தோட்டத்தில் அமிலதன்மையை நிலை நிறுத்த டோலோமைட் இடவேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் காய்கறி பயிர்களில் வெள்ளைப் புழுவைக் கட்டுப்படுத்த மெட்டாரைசியம் 20 கிலோ கிராம் நன்கு மக்கிய தொழு உரத்தோடு கலந்து ஒரு எக்டருக்கு இட வேண்டும்.
- வெயில் அதிகமான பகல் நேரங்களில் கறவை மாடுகளுக்கு பச்சைபுல், புரதம்-கொழுப்பு தாது உப்புக் கலவை, கொடுக்க வேண்டும். மற்றும் குளிர்ந்த நேரங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் நிலக்கடலை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழு உரத்துடன் . அடியுரமாக 11 கிலோ யூரியா. 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் , 50 கிலோ பொட்டாஷ் உடன் 80 கிலோ ஜிப்சம் இட்டு விதைப்பு செய்ய வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்களில் வெப்பத்தின் தாக்கத்தை தவிர்க்க வயலைச் சுற்றிலும் வரப்புகளிலும் அகத்தி அல்லது சித்தகத்தி அல்லது ஆமணக்கு விதைகளை 5, 6 அடி இடைவெளியில் விதைப்புச் செய்யவேண்டும்.
- விவசாயிகள் தற்பொழுது பெய்துள்ள கோடை மழையினை பயன்படுத்தி மரவள்ளி ( 4 ,5 மாத வயது) பயிரில் மேலுரம் மற்றும் நன்கு மக்கிய தொழுஉரம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

**<u>கொரோனா (கோவிட் டூ19) நோய்தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள கால்நடை மற்றும் கோழிப்பண்ணையாளர்கள் பண்ணை , வெளி விற்பனையின் போது கடைபிடிக்க வேண்டிய சில அறிவுரைகள்</u>**

- கால்நடைகள். முட்டை மற்றும் கோழிகளை பண்ணை வாயிலில் அல்லது கடைகளில் விற்பனை செய்யும் போது பாதுகாப்பாக முககவசம் மற்றும் கையுறை அணிந்து கொள்ள வேண்டும்.
- கடைகளில் விற்பனையின் போது கூட்டத்தைத் தவிர்த்து சமூக இடைவெளியினைப் பின்பற்ற வேண்டும்.
- ஆடு. பன்றி அல்லது கோழியை இறைச்சியாக மாற்றி விற்பனை செய்யும் போது அதற்கு பயன்படுத்தும் உபகரணங்களை முறையாக கழுவி கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்து பயன்படுத்த வேண்டும். (5% லைஸால் அல்லது 1 % டைபோகுளோரைட் கரைசல்).
- இறைச்சிக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தி அந்த இடத்தை சுத்தமாக கழுவி கிருமிநாசினி தெளிக்க வேண்டும்.
- பண்ணைகளில் அல்லது பொது இடங்களில் எச்சில் துப்பக் கூடாது, இருமும் போதும். தும்மும் போது முழங்கையாலோ அல்லது கை குட்டையாலோ கொண்டு மூக்கு மற்றும் வாயினை மூடிக்கொள்ள வேண்டும்.

**கோடை காலத்தில் நாட்டுக்கோழி பராமரிப்பிற்கான ஆலோசனைகள்**

- கோழிகளுக்கு நாள் முழுவதும் தரமான குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- கோடைகாலங்களில் தீவிர முறையில் வளர்த்தப்படும் நாட்டுக்கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. பெரும்பாலும் பின்பக்கம் கொத்திக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருக்கும், இந்த பிரச்சனையினை குறைக்க விவசாயிகள் தீவனத்தில் 0.5 % ( 100 கிலோ தீவனத்திற்கு அரை கிலோ உப்பு ) சமையல் உப்பினை சேர்க்க வேண்டும்.
- கோழிகளில் வெப்ப அயர்ச்சியியை போக்க தரமான குடிநீரில் நெல்லி , மோர் அல்லது எலுமிச்சை பழச்சாறு ( 1.0, 0.3 விழுக்காடு வரை ) சேர்க்கலாம்.
- கோடைகாலத்தில் தண்ணீரில் நுண்ணுயிர் சுமை அதிகமாக இருக்கும். அதை சரி செய்ய தண்ணீரில் பிளிச்சீங் பவுடர் 15 கிராம் - 1000 லிட்டரில் கலக்கலாம் அல்லது ஹைட்ரஜன் பெராக்ஸைடு 8 மில்லி - 1000 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.
- பொதுவாக நாட்டுக்கோழி வளர்ப்பு விவசாயிகள் வெள்ளை கழிச்சல் நோய்க்கு எதிராக கோழிகளுக்கு தடுப்பூசி அளிக்க வேண்டும், அதாவது 7 வது நாள் 1 தடுப்பூசி ( கண்ணில் சொட்டு மருந்தாக ). 28 வது நாள் லசோட்டா ( கண்ணில் சொட்டு மருந்தாக ). 56 வது நாள் ஆர்டிவிகே தடுப்பூசி ( ரெக்கையில் போட வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 முதல் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையில் மிளகாய் செடியில் இலைப்பேன் தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு பைப்ரினில் 1.5 மில்லி தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையில் பூக்கும் பருவம், காய்பிடிக்கும் பருவத்தில் உள்ள நிலக்கடலை பயிருக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழத்தின் நிலக்கடலை ரிச் 2 கிலோ / 200 லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு கலந்து தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் கத்தரியில் குருத்து துளைப்பான் மற்றும் காய்த்துளைப்பானைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு குளோரான்ட்ரைனிலிபுரோல் 0.5 மில்லி அல்லது இமாமெடக்டின் பென்சோவேட் 0.4 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் தென்னையில் வெள்ளை சுருள் ஈக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு வேப்பஎண்ணெய் @ 10 மில்லி அல்லது அசாடிராக்டின் 1% @ 5 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் தர்பூசணியில் சிவப்பு பூசணி வண்டு தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த மாலத்தியான் ஒரு லிட்டருக்கு 1 மில்லி வீதம் தெளிக்கவும்.
- தற்போது அதிகபட்ச வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடைகளை காலை 6 மணி முதல் 10 மணிக்குள்ளும் மாலை 4 மணி முதல் 6 மணிக்குள் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.
- கால்நடைகளுக்கு எல்லா நேரங்களிலும் சுத்தமான குளிர்ந்த குடிநீர் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் கலப்பின கறவை மாடுகளில் வெப்ப அயற்சியை கட்டுப்படுத்த நீரை தெளிப்பான் அல்லது நுண் நீர் தெளிப்பானை பகல் நேரங்களில் 12 மணி முதல் 2 மணி அளவில் பயன்படுத்தலாம்.

- தற்போது நிலவும் வானிலையால் இறைச்சிக் கோழிகளுக்கு வெப்ப அயற்சி தாக்காமல் இருக்க வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் சி கலந்து கொடுக்க வேண்டும்.
- தற்போது நிலவி வரும் வானிலையால் வெண் பன்றிகளுக்கு வெப்ப அயற்சி தாக்காமல் இருக்க குடிநீரில் நெல்லிக்காயை (1 லிட்டருக்கு 1 நெல்லிக்காய்) நசுக்கி போட வேண்டும்.

## 7.அதிக மழை பெறும் மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்ப நிலை $35^0$செ முதல் $36^0$செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை $26^0$செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையில் நெல் விதைப்பிற்கு நாற்றங்கால் தயார் செய்யவும்.
- தற்போது நிலவும் வானிலையால் கிராம்பு கொடிகளுக்கு நீர் பாய்ச்சவும்.
- தற்போது நிலவும் வானிலையில் தென்னையில் சிலந்திப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் (50%) 7.5 மி.லி, 7.5 லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையில் பப்பாளி மரங்களில் அறுவடைக்கு பின் ஏற்படும் பழ அழுகலை தடுக்க மேங்கோசெப் என்ற மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து பழம் அறுவடை செய்வதற்கு முன்பு தெளிக்க வேண்டும்.
- மிளகு கொடிகளுக்கு வட்ட பாத்திகள் அமைத்து அவற்றில் வேர் உட்பூசண உரம் மற்றும் மண் புழு உரங்களை இட்டு அதன் மேல் காய்ந்த இலைகளை கொண்டு மூடாக்கு அமைத்து உடனடியாக அதிக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். இதன் மூலம் மகசூலை அதிகரிக்க செய்யலாம்.
- தற்போது நிலவும் வானிலையில் ரோஜா, மல்லிகை, சம்பங்கி செடிகளில் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் அதிகமாக காணப்படும் எனவே இத்தாக்கத்தைக் கட்டுப்படுத்த புரோப்பனோபாஸ் 2 மி.லி/லிட்டர் இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலை**

**ஆராய்ச்சி மையம்**